# எங்கும் நிறைந்திருக்கும் பராசக்தி!

## அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி அமெரிக்கப் பயணத்தில் பெருமிதம் !

எங்கள் வாழ்க்கை ஏட்டில் எந்தப் பக்கம் புரட்டினாலும் காணப்படும் பாடம், பகுத்தறிவு, பயனுள்ள அரசியல் தத்துவம்" என முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் பராசக்தியில் எழுதிய வசனத்தின் அர்த்தத்தை சில நாட்களுக்கு முன்னதாக நான் மேற்கொண்ட அமெரிக்கப் பயணத்திலும் உணரும் வாய்ப்பு கிடைத்தது. தந்தை பெரியார்தான் எங்களின் பாலபாடம்! பேரறிஞர் அண்ணா எங்களின் பகுத்தறிவு ஆசான்! முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள்தான் எங்களின் அரசியல் தத்துவம்! என்பதை ஒவ்வொரு தருணத்திலும் உணரும் வாய்ப்பு கிடைத்தது.

அமெரிக்கப் பயணத்தின் போது பல நிகழ்ச்சிகளில் கலந்துகொண்டோம். தமிழர்கள் அதிகம் நிறைந்திருந்த அந்த நிகழ்ச்சிகளில் எல்லாம் தமிழும், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களும் மட்டுமே நிறைந்திருந்தார்கள்.

எங்கும் நிறைந்திருக்கும் பராசக்தியின் பேராற்றலை கலைஞரின் உடன்பிறப்புகளாகிய உங்களிடம் பகிர்ந்துகொள்வதில் மகிழ்ச்சி அடைகின்றேன்.

கடந்தாண்டு 18 நவம்பர் 2022. பாஸ்டன் நகரில் அமைந்துள்ள மைக்ரோசாப்ட் நிறுவனத்தின் அலுவலகத்தைப் பார்வையிட்டு நிறுவனத்தின் இயக்குநர்கள் மற்றும் பயிற்சியாளர்களுடன் உரையாடும் வாய்ப்பு கிடைத்தது. நமது கிராமபுற மாணவர்களுக்கு எட்டாக்கனியாக இருந்த "ரோபோடிக்ஸ், செயற்கை நுண்ணறிவு போன்ற பயிற்சிகளை எங்கள் மாநில அரசுப் பள்ளி மாணவர்களுக்கு வழங்க முடியுமா?" எனும் கோரிக்கையையும் அவர்களிடம் முன்வைத்தோம். மிகுந்த மகிழ்ச்சியுடன் ஒப்புக் கொண்டார்கள்.

தமிழ்நாடு திரும்பியவுடன் கழகத் தலைவர், முதலமைச்சர் அவர்களிடம் மைக்ரோசாப்ட் நிறுவனத்துடனான அனுபவத்தை பகிர்ந்துகொண்டு துறை சார்ந்த பணிகளில் வழக்கம் போல ஈடுபட ஆரம்பித்தோம்.

சில நாட்களுக்குப் பிறகு முதலமைச்சர் அவர்களின் அலுவலகத்தில் இருந்து அழைப்பு! முதலமைச்சர் அவர்களை சந்திக்கும்படி கேட்டுக்கொண்டார்கள். முந்தைய சந்திப்பிற்கு பிறகு ரோபோடிக்ஸ், செயற்கை நுண்ணறிவு மற்றும் மைக்ரோசாப்ட் நிறுவனத்தில் கொட்டிக்கிடக்கும் நவீன தொழில்நுட்ப வாய்ப்புகள் என அனைத்தையும் ஒரு மாணவன் போல தெரிந்துகொண்ட மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அதுதொடர்பாக மிக விரிவாக என்னிடம் உரையாடி ஒரு ஆணையையும் பிறப்பித்தார்கள்.

"வருங்காலத்தில் செயற்கை நுண்ணறிவு எனப்படும் Artificial Intelligence தொழில்நுட்பம்தான் உலகை ஆளப்போகிறது என்கிறார்கள். மேலும் மைக்ரோசாப்ட் நிறுவனத்துடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொள்வதற்காக இந்தியாவில் இருந்து பல மாநிலங்கள் போட்டியிடுகின்றது. உடனே மைக்ரோசாப்ட் நிறுவனத்துடனான புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டு நமது தமிழ்நாட்டு கிராமப்புற மாணவர்களுக்கு இந்தியாவில் முதன்முதலாக அத்தகைய தொழில்நுட்பம் கிடைப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்" என உத்தரவிட்டார்கள்.

முதலமைச்சர் அவர்களின் ஆக்கத்தையும், ஊக்கத்தையும் மட்டுமே கையில் எடுத்துக்கொண்டு அதற்கான முயற்சிகளில் உடனே ஈடுபடத் தொடங்கினோம். அந்நிறுவன இயக்குநர்களை தொடர்பு கொண்டோம். மைக்ரோசாப்ட் நிறுவனத்திடம் இருந்து தொடர்ச்சியாக ஒத்துழைப்புகள் வந்துகொண்டே இருந்தது.

அதை தொடர்ந்து மீண்டும் அமெரிக்கப் பயணத்தை மேற்கொண்டு TEALS(Technical Education And Learning Support) எனும் திட்டத்தை தமிழ்நாட்டில் செயல்படுத்தும் நோக்கில் சியாட்டில் அமைந்துள்ள மைக்ரோசாப்ட் தலைமையகத்தில் வரலாற்று சிறப்புமிக்க புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டோம். முதல்கட்டமாக பள்ளிகள் தேர்ந்தெடுக்கப்பட்டு 3800 மாணவர்களுக்கு ரோபோடிக்ஸ், செயற்கை நுண்ணறிவு போன்ற கற்றல் சார்ந்த தொழில்நுட்பத்தை மைக்ரோசாப்ட் நிறுவனத்துடன் இணைந்து தமிழ்நாடு பள்ளிக் கல்வித்துறை வழங்கவுள்ளது! இதற்கு துணை நின்ற பள்ளிக் கல்வித்துறை உயர் அலுவலர்களுக்கும், மைக்ரோசாப்ட் நிறுவன அலுவலர்களுக்கும், முதலமைச்சர் அவர்களின் ஊக்கத்திற்கும் மனமார்ந்த நன்றிகள்!



அதுமட்டுமல்லாமல் முதலமைச்சர் அவர்களை அலைபேசி வாயிலாக அழைத்து உரையாடும் ஒவ்வொரு சமயத்திலும் எங்களுக்கான ஊக்கத்தை அளித்து வந்தார். அவரின் மேற்பார்வையில் முரசொலியில் வெளியான செய்திகளும், அவரின் சமூக வலைதளத்தில் எங்களை பாராட்டி பதிவிட்ட பதிவுகளும் எங்களை மென்மேலும் ஊக்கப்படுத்தின.

வட அமெரிக்கத் தமிழ்ச் சங்கம்(FeTNA) ஒருங்கிணைத்திருந்த உலகத் தமிழ்த் தொழில் முனைவோர்களுக்கான(FITEN FeTNA International Tamil Entrepreneur Network) நிகழ்வில் பங்கேற்று முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களும், முதலமைச்சர் அவர்களும் தமிழ்நாட்டின் குறு,சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்களின் வளர்ச்சிக்கு ஆற்றிய பங்கினை எடுத்துரைத்தோம். "நம்ம School. நம்ம ஊரு பள்ளி" திட்டத்தின் மூலம் தமிழ்நாட்டின் அரசுப் பள்ளிகளுக்கு உதவ முன்வாருங்கள் என அழைப்பு விடுத்து, திட்டத்தைத் தொடங்கி வைத்த கழகத் தலைவர், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் முதல் நபராக தனது சொந்த நிதியில் இருந்து ரூ.5 இலட்சம் நிதி வழங்கினார் என்பதையும் கூறினோம். தமிழ்நாட்டின் கல்வி வளர்ச்சிக்கு கடந்த இரண்டு ஆண்டுகளாக செயல்படுத்தப்பட்ட திட்டங்களை பற்றி விளக்கி மேடையில் இருந்து விடைபெறும் தருணத்தில் அனைவரும் எழுந்து நின்று ஆரவாரம் செய்து பாராட்டியது முதலமைச்சர் அவர்களின் தலைமையிலான திராவிட மாடல் அரசிற்கு கிடைத்த வெற்றியாகும்!

சாக்ரமெண்டோ நகரில் நடைபெற்ற வட அமெரிக்கத் தமிழ்ச் சங்கப் பேரவையின் 36'ஆவது ஆண்டு தமிழ் விழாவில் சாகித்ய அகாதமி விருது பெற்ற எழுத்தாளர் இமையம் அவர்களின் "திருநீறு சாமி" நூலினை கலைஞர் அறக்கட்டளையின் சார்பாக வெளியிட்டோம்.

தொடர்ந்து 140 ஆண்டுகளுக்கும் மேலாக அறிவு சேவையாற்றும் சான் ஃபிரான்சிஸ்கோ பொது நூலகத்தைப் பார்வையிட்டோம். 25'க்கும் மேற்பட்ட கிளை நூலகங்களை கொண்டிருக்கும் மிகப்பெரிய நூலகத்தைப் பார்வையிட்டு அதன் நிர்வாகிகளுடன் கலந்துரையாடிய போது மதுரையில் திறக்கப்படவிருக்கும் "கலைஞர் நூற்றாண்டு நூலகம்" பற்றிய பிரமாண்டம்தான் என் மனதினுள் விரிந்தது!

ஆம்... சான் பிரான்சிஸ்கோ பொது நூலகத்தை விடவும் கலைஞர் நூற்றாண்டு நூலகமானது பிரமாண்டமாகமிகச்சிறந்த உள்கட்டமைப்பு வசதிகளுடன் அமைக்கப்பட்டுள்ளது என்பதை எண்ணி முதலமைச்சர் அவர்களின் மாணவனாகவும், ஒரு தமிழனாகவும் பெருமையடைந்தேன்!

இந்தியாவிலயே முதன்முறையாக ஒரு நூலகத்தில் குழந்தைகள் விளையாட்டுடன் கற்பதற்கான Interactive Panel வசதி, குழந்தைகளுக்கான தனித் திரையரங்கம், Hologram வசதிகள் போன்ற எண்ணற்ற பிரமாண்டங்களும், புதுமைகளும் கலைஞர் நூற்றாண்டு நூலகத்தில் தமிழர்களுக்காகக் காத்திருக்கின்றது. தமிழர்கள் அனைவரும் ஒருமுறையேனும் கலைஞர் நூற்றாண்டு நூலகம் செல்ல வேண்டும் எனும் அன்பான கோரிக்கையினையும் இந்நேரத்தில் உங்கள் முன் வைக்கின்றேன்.

சியாட்டில் வசிக்கும் தமிழ் உடன்பிறப்புகளின் அழைப்பினை ஏற்று அவர்களின் குழந்தைகளை சந்தித்தோம். உலக வல்லரசான அமெரிக்காவில் தமிழ்ப் பறையை இசைத்து மெய்சிலிர்க்கும் வகையிலான வரவேற்பை மாணவச் செல்வங்கள் வழங்கினார்கள்.

தமிழ்நாட்டின் அரசுப் பள்ளிகளில் ஏற்பட்டுக்கொண்டிருக்கும் மறுமலர்ச்சிகள் குறித்து மாணவச் செல்வங்கள் ஆர்வமுடன் கேட்டறிந்தார்கள்.

கடல் கடந்து சென்றாலும் அவர்களின் மனம் முழுக்க தமிழ்நாடும், தமிழும் மட்டுமே நிறைந்திருக்கின்றது. அங்குள்ள மாணவர்கள் ஞாயிறுதோறும் தமிழ் சிறப்பு பயிற்சி வகுப்புகளில் கலந்துகொள்கிறார்கள். சுமார் ஆயிரத்திற்கும் மேற்பட்ட மாணவச் செல்வங்கள் இப்பயிற்சியில் பங்கேற்று வருகின்றார்கள் என்பது தமிழ் வாழும்! தமிழ் வளரும்! என்பதற்கான சாட்சியாக அமைந்திருந்தது. இம்முயற்சிக்கு உறுதுணையாக விளங்கும் பெற்றோர்களுக்கும், தமிழ் பயிற்சி அளிக்கும் தன்னார்வலர்களுக்கும் மனமார்ந்த நன்றி களைத் தெரிவித்துக்கொண்டோம்.

அனைத்து நிகழ்ச்சிகளையும் முடித்துவிட்டு, முதலமைச்சர் அவர்களின் உத்தரவினையும் நிறைவேற்றிய மனநிறைவுடன் தமிழ்நாடு புறப்படும் நேரம் வந்தது! அந்நேரத்தில்தான் என் மீது "தெற்கில் இருந்து வந்த சூரியனின்" கீற்றுப் படர்ந்தது.

தமிழ்நாட்டின் கடற்கரை கிராமமான புதுமடத்தில் பிறந்தவர் ராஜா முகமது! மீனவர் சமுதாயத்தைச் சேர்ந்த உழைக்கும் வர்க்கத்தினர். தற்போது அமெரிக்காவில் வசித்து வருகின்றார். என்னருகே வந்து உரையாடினார். சிறிது நேரம் மட்டுமே உரையாடினாலும் கலைஞரை பற்றி மட்டுமே பேசினார்.

"கலைஞர் இல்லையென்றால் நான் இங்கே இல்லை! திராவிடக் கொள்கைகளை சட்டங்களாக்கி எங்களைப் போன்ற ஏழை எளிய மக்களுக்கு சமூகநீதி கிடைக்கச் செய்தவர் கலைஞர்தான்! அவரின் ஆட்சிக்காலத்தில் எங்கள் மீனவ சமூகத்தினருக்கு எண்ணற்ற நலத் திட்டங்கள் கிடைத்தது. நான் பயின்ற காலத்தில் இடஒதுக்கீடு, கல்வி உதவித்தொகை போன்ற திட்டங்களால் சிறப்பான உயர்கல்வியும் எனக்கு கிடைத்தது" என்று சொல்லிய ராஜாமுகமது அவர்கள் விடைபெற்று சென்றார்.

ஆம் ஒன்றை சொல்ல மறந்து விட்டேன். புதுமடத்தில் பிறந்து அமெரிக்காவில் வசிக்கும் ராஜா முகமது பணியாற்றும் இடம் "மைக்ரோசாப்ட்". "கலைஞரால் உயர்வுக்கு வர முடிந்தது" என்று சொன்னவர் தற்போது கலைஞர் அவர்களால் கட்டியெழுப்பப்பட்ட தமிழ்நாட்டின் அரசுப் பள்ளி மாணவர்களுக்கு நவீன தொழில்நுட்பத்தை வழங்கும் இடத்தில் இருக்கின்றார்.

ஆம், தமிழர்களின் வாழ்க்கை ஏட்டில் எந்தப் பக்கம் புரட்டினாலும் காணப்படும் பாடம், பகுத்தறிவு, பயனுள்ள அரசியல் தத்துவம் அவரின் வாழ்விலும் எதிரொலித்தது.

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் வழியில் திராவிடக் கொள்கைகளை இறுகப்பற்றி முதலமைச்சர் அவர்கள் தீட்டும் திட்டங்களால் தமிழர்கள் மென்மேலும் உயரத்தை அடைவார்கள் என்பதிலும் சந்தேகம் இல்லை!

ஓடாமல் இருந்த திருவாரூர் தேரை ஓட வைத்தது மட்டுமல்லாமல், காலங்காலமாக அடிமைப்பட்டு கிடந்த தமிழினத்தை சுயமரியாதை, சமத்துவம் எனும் வடம் பிடித்து உயர்ந்த இடத்திற்கு கொண்டு வந்தவர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள். அவரின் வழியில் தடம் மாறாமல் திராவிடத்தின் வடம் பிடித்து செயலாற்றுபவர் கழகத் தலைவர் முதலமைச்சர் அவர்கள்.

திராவிடம் என்ன செய்தது? என்கிறார்கள். திராவிடம் ராஜாமுகமது போன்ற பல தமிழர்களை சமத்துவத்துடன் வாழ வைத்துக்கொண்டிருக்கிறது. திராவிடத்தின் அடுத்த தலைமுறையை வளர்த்தெடுக்க வேண்டிய பொறுப்பு உடன்பிறப்புகளாகிய நமது அனைவருக்கும் உண்டு!

கலையிலும், அரசியலிலும் இளைஞர்களிடம் திராவிடத் தீயை அணையாமல் காப்பாற்றி வரும் கழக இளைஞரணி செயலாளர், அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் தலைமையில் அணிவகுக்கத் தயாராவோம்! திராவிடம் காப்போம்!

## சில வரிச் செய்திகள்




*ஸ்ரீஹரிகோட்டா,ஜூலை.16-*

ஸ்ரீஹரிகோட்டாவில் இருந்து எல்விஎம்3 ராக்கெட் மூலம் சந்திரயான்3 விண்கலம் நேற்று முன்தினம் மதியம் 2.35 மணிக்கு வெற்றிகரமாக விண்ணில் ஏவப்பட்டது. இஸ்ரோ விஞ்ஞானிகளுக்கு பல்வேறு தரப்பிலிருந்தும் பாராட்டுகள் குவிந்து வருகின்றன.


செய்தியாளர்கள் சந்திப்பில் பேசிய இஸ்ரோ தலைவர் சோமநாத், "திட்டமிட்டபடி விண்கலம் பூமியில் இருந்து 179 கிலோ மீட்டர் தொலைவில் அதன் சுற்று வட்டப்பாதையில் நிலைநிறுத்தப்பட்டது. சந்திரயான்3 நிலவை நோக்கிய தனது பயணத்தைத் தொடங்கிவிட்டது. இனி எல்லாம் சரியாக நடைபெற வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்" என்று தெரிவித்தார். 'மிஷன் அக்கம்ப்ளிஷ்ட்' என்று ஆங்கிலத்தில் அவர் உரையைத் தொடங்கியதும் அரங்கில் கரகோஷம் எழுந்தது.

தொடர்ந்து பேசிய சந்திரயான்3 திட்ட இயக்குநர் மோகன் குமார், "சந்திரயான்3 விண்கலம் வெற்றிகரமாக விண்ணில் நிலைநிறுத்தப்பட்டதன் மூலம் மீண்டும் அது மிகவும் வலுவான ஒரு விண்கலம் என்பதை உலகுக்கு நிரூபித்துள்ளது" என்று பெருமிதம் தெரிவித்தார்.

----------

### மத்திய பிரதேசத்தில்

## மேலும் ஒரு சிவிங்கிப் புலி உயிரிழப்பு!



*போபால்,ஜூலை.16-*

மத்திய பிரதேசத்தின் குனோ தேசிய பூங்காவில் மேலும் ஒரு சிவிங்கிப் புலி பலியான சம்பவம் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

வன அதிகாரி ஜே.எஸ். சௌஹான் பேசுகையில், "சூரஜ் என்ற ஆண் சிறுத்தை குனோவில் இறந்துள்ளது. இதன்மூலம் இறப்பு எண்ணிக்கை 8 ஆக உள்ளது. இறப்புக்கான காரணம் பிரேதப் பரிசோதனைக்குப் பிறகு தெரியும். இந்த இறப்புகள் இயற்கையாக நடந்தால். அப்படியானால் நாம் பயப்பட வேண்டாம். மேலும் உயிரிழப்புகள் ஏற்படாமல் இருக்க நாங்கள் முயற்சித்து வருகிறோம்.

தேவையான அனைத்து நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டு வருகின்றன, என்று அவர் கூறினார்.

-----------

### தீபாவளியை முன்னிட்டு

## 15 நிமிடங்களில் முடிந்த முன்பதிவு!



*சென்னை,ஜூலை.16-*

தீபாவளி பண்டிகைக்கான நவம்பர் 11 ஆம் தேதி தென் மாவட்ட ரயில்களில் பயணிப்பதற்கான முன்பதிவு டிக்கெட் 15 நிமிடங்களில் முடிந்தது.

நடப்பாண்டு தீபாவளி பண்டிகை நவம்பர் 12 ஆம் தேதி கொண்டாடப்பட உள்ளது. இதையொட்டி ரயில்களில் பயணிக்க முன்பதிவு தொடங்கியுள்ளது.

அதன்படி தீபாவளிக்கு முந்தைய நாள், நவ. 11 ஆம் தேதி பயணிக்க ரயில் முன்பதிவு டிக்கெட் நேற்று முன்தினம் (வெள்ளிக்கிழமை) காலை 8 மணிக்குத் தொடங்கியது.

முன்பதிவு தொடங்கிய 15 நிமிடங்களிலேயே தென் மாவட்டங்களுக்குச் செல்லும் ரயில்களில் டிக்கெட்கள் முழுவதும் விற்றுத் தீர்ந்தன.

----------

### கொரோனாவுக்கு

## உலக அளவில் 6,899,198 பேர் பலி!



*ஜெனீவா,ஜூலை.16-*

உலகம் முழுவதும் கொரோனாவால் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 68.99 லட்சத்தை தாண்டியது. பல்வேறு நாடுகளைச் சேர்ந்த 6,899,198 பேர் கொரோனா வைரசால் உயிரிழந்தனர். உலகம் முழுவதும் கொரோனாவால் 691,439,884 பேர் பாதிக்கப்பட்டுள்ள நிலையில் 663,953,863 பேர் குணமடைந்துள்ளனர். மேலும் 37,189 பேர் கவலைக்கிடமான நிலையில் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

----------

### கோவை, மதுரை மெட்ரோ ரயில்:

## தமிழ்நாடு அரசிடம் திட்ட அறிக்கை சமர்ப்பிப்பு!



*சென்னை,ஜூலை.16-*

கோவை மற்றும் மதுரை மெட்ரோ ரயில் திட்டங்களுக்கான திட்ட அறிக்கை தமிழக அரசிடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

சென்னை மெட்ரோ ரயில் முதல் கட்ட திட்டம் 54.1 கி.மீ தொலைவிற்கு விம்கோ நகர் முதல் சென்னை விமான நிலையம் வரை, சென்ட்ரல் முதல் பரங்கிமலை வரை என இரண்டு வழித்தடங்களில் முழுமையாக செயல்பாட்டில் உள்ளது. இந்நிலையில், 2வது கட்ட மெட்ரோ பணிகள் மிக வேகமாக நடைபெற்று வருகின்றன. ரூ.69,180 கோடி செலவில், 118.9 கிலோ மீட்டர் நீளத்திற்கு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

இந்தப் பணிகள் அனைத்தும் 2026ம் ஆண்டுக்குள் முடிக்க இலக்கு நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.